13.07.2022 அ.வ.எண்.99/2020 வா.சா.1

பெயர்:-சாம்பசிவம்

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-

1. எனது தகப்பனார் கடந்த 06.09.2007-ல் கிரையம் பெற்ற சொத்துக்கு உண்டான சர்வே எண் குறித்த பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்களை பார்த்துள்ளேனா? என்றால் பார்த்துள்ளேன். மேற்படி சொத்துக்குரிய பட்டா, சிட்டா, அடங்கல் வைத்துதான் எனது தகப்பனார் கிரையம் பெற்றார் என்றால் சரிதான். மேற்படி வருவாய் ஆவணங்கள் எனது வசம் உள்ளதா? என்றால் தேடி பார்க்க வேண்டும். மேற்படி வருவாய் ஆவணங்களில் எல்லாம் கிட்டையா வகையறா பெயர்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். 03.11.2008-ம் தேதிய வா.சா.ஆ.2 ஆன பிழைத்திருத்த பத்திரம் எதன் அடிப்படையில் ஏற்பட்டது என்ற விவரம் தெரியுமா? என்றால் தெரியும். மேற்படி ஆவணத்தில் பழைய சர்வே எண்ணுக்கு பதிலாக திருத்தப்பட்ட புதிய சர்வே எண்ணுக்குண்டான வருவாய் ஆவணங்களை வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். பெயர் மாற்றாமல் வைத்துள்ளேன். திருத்தப்பட்ட புதிய சர்வே எண் இல்லை என்று சொன்னால் ஆவணங்களை பார்க்க வேண்டும். தற்போது எனக்கு தெரியாது.

2. பிழைதிருத்த ஆவணமானது எனது தகப்பனாரால் தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியும் எனது தகப்பனாரும் சேர்ந்துதான் மேற்படி ஆவணத்தை எழுதி கொண்டார்கள். கிரையபத்திரம் எழுதி கொடுத்த பிறகு எத்தனை வருடங்கள் கழித்து இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் 14 வருடங்கள் கழித்து தாக்கல் செய்துள்ளோம். எனது தகப்பனார் இறந்ததால் காலம் தாமதம் ஆகிவிட்டது. வழக்கு சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள திருத்தப்பட வேண்டும் என்று சொல்லும் சொத்து சம்மந்தமான பட்டா, சிட்டா போன்ற வருவாய் ஆவணங்களை யார் பெயரில் உள்ளது என்று பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். திருத்தப்பட வேண்டிய சொத்துக்குரிய பட்டா, சிட்டா, அடங்கல் போன்ற வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. டி.எஸ்.171 ஆனது தனசேகரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அது தவறுதலாக உள்ளது. டி.எஸ்.172 ஆனது ரகு என்பவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். டி.எஸ்.173-ஆனது தனசேகரன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். டி.எஸ்.177-ஆனது காளியண்ண கவுண்டர் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி தனசேகரன்

ரகு மற்றும் காளியண்ண கவுண்டரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி டி.எஸ்.எண்கள் யாருடைய பெயரில் உள்ளதோ அந்நபர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்காமல் மேற்படி டி.எஸ்.நம்பர்களை திருத்தம் செய்ய கோரி இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேற்படி டி.எஸ்.எண்கள் மற்றொருவருடைய பெயரில் உள்ள நிலையில் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு அதற்குண்டான ஆவணங்களை வாங்கி பார்த்து பரிசீலனை செய்தோமா என்றால் ஆமாம். பரிசீலனை செய்து அவர்களுடைய பெயர்கள் தவறுதலாக மேற்சொன்னவாறு கூறியதில் அவர்கள் எங்களை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லிவிட்டார்கள். ஆகையால் வழக்கு தாக்கல் செய்தோம்.

4. மேற்படி பரிசீலனை செய்த ஆவணங்களை கைவசம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். மேற்படி ஆவணங்களை நாங்கள் பார்க்கும் போது கிட்டையா வகையறா பெயரில் மேற்படி ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் மற்றும் ஒருமுறை பார்க்க வேண்டும். தாவா தாக்கல் செய்வதற்கு முன்பு தவறுதலாக பிழை திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று வட்டாட்சியரிடம் மனு கொடுத்தேனா என்றால் நியாபகம் இல்லை. ஆனால் கிராம நிர்வாக அலுவலரிடம் கூறினேன். மேற்படி மனு கொடுத்தது சம்மந்தமான விவரங்களை வாதுரையிலோ அல்லது பிரமாண பத்திரிக்கையிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், மேற்படி ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். தற்போது யார் சொல்லி கிரைய ஆவணத்திலும் அதனை தொடர்ந்து ஏற்பட்ட பிழை திருத்த ஆவணத்திலும் தவறு உள்ளது என்பதை தெரிந்து கொண்டோம் என்றால் சர்வேயரும், கிராம நிர்வாக அலுவலரும் கூறினார்கள். கிராம நிர்வாக அலுவலர் வைத்துள்ள ஆவணங்களின் படி ஒவ்வொரு சர்வே எண்களும் ஆதியில் யார் பெயரில் உள்ளது என்பதும் மேற்படி சர்வே எண்கள் கிரையத்தின் அடிப்படையில் யாருடைய பெயரில் உள்ளது என்பது குறித்தும் குறிப்புகள் இருக்கும் என்று சொன்னால் சரிதான். ஆனால் நாங்கள் சர்வே எண்ணை சரியாக மாற்றாததால் குறிப்புகள் இருக்காது.

5. 06.09.2007-ல் ஆவணத்தில கண்டுள்ள சொத்து விவரத்தின் சர்வே எண். பெயர் மாற்றம் எனது தகப்பனாரால் மனு கொடுக்கப்பட்டு செய்யப்பட்டது என்று சொன்னால் பிரதிவாதியும் சேர்ந்து தான் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. சம்மந்தப்படாத நபர்களின் சொத்துக்களை சேர்த்து 03.11.2008 பத்திரம் உருவாக்கப்பட்டதால் மேற்படி பத்திரமானது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 3-ம் தரப்பினர்களின் சொத்துக்களை சேர்த்து எனது தகப்பனார் மேற்படி ஆவணத்தை எழுதி கொண்டதால் மேற்படி ஆவணம்

செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 03.11.2008-லேயே பிழை பத்திரம் ஏற்பட்டுள்ள நிலையில் காலம் கடந்து 3-ம் தரப்பினர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில திருத்தம் செய்ய வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது செல்லத்தக்கல்ல என்றும் மேற்படி 3-ம் தரப்பினர்களை இவ்வழக்கில் கட்சி சேர்க்காமல் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

6. தாவா சொத்தின் மூல பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். தாவா சொத்திற்குரிய மூல பத்திரம் என்ன என்றால் விசாலாட்சி குடும்பத்தார்கள் இடையே ஏற்பட்ட பாகப்பாத்திய விடுதலை பத்திரம் ஆகும். அதனடிப்படையில் விசாலாட்சி எங்களுக்கு கிரையம் கொடுத்தார். மேற்படி பாகப்பாத்திய விடுதலைபத்திரமானது கிட்டையா வகையறாவால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பத்திரம் என்றால் பெயர் எனக்கு சரியாக தெரியவில்லை. மேற்படி பாகப்பாத்தியம் விடுதலை ஆவணத்தின்படி எந்த சர்வே எண்ணில் கிட்டையாவிற்கு சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் சர்வே எண்.339/3-ல் ஒதுக்கப்பட்டது. SF நம்பர் மற்றும் TS நம்பர் என்ன என்பதை காட்ட கூடிய வகையில் Equtation எதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. திருத்தம் மற்றும் மாற்றம் குறித்து நிலையான சட்டத்தின்படி வட்டாடசியரிடம்தான் மனு கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னால் தெரியாது. மேற்சொன்னவாறு மனு எதுவும் கொடுக்காமல் காலம் தாழ்த்தி யுகம் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது நல்லெண்ணத்தின் அடிப்படையில் ஏற்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனவே தாவாவானது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

(Sd) சாம்பசிவம்

(Sd)Tmt.P.Sharmila, B.B.A., B.L,
District Munsif,
Sathyamangalam.